1974 மார்ச் 12]

திரு ஜே. ஜேம்ஸ் : 1948ஆம் ஆண்டுச் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமுலில் இல்லாத காரணத்தினால், அரசு நிதி உதவி இப்பொழுது அங்கே கொடுப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, புதிய ஏற்பாடு வரும் வரையிலும், இடைக் காலத்தில் அரசு உதவி அளிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தனியாகக் கவனிக்க வேண்டும். விரைவிலே அந்த அறிக்கை வந்தவுடனே அதையும் சேர்த்துக் கவனிக்க வேண்டும் என்று அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது. இடையிலே என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நூலகச் சீரமைப்பு ஆணைக் குழு அறிக்கை அனுப்புவதற்கு ஏதாவது கால வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா ? அறிக்கை அனுப்புவதைக் கொஞ்சம் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூன்று மாத காலத்திற்குள் அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். இன்னும் சில இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தினால் விரைவிலே அந்த இடங்களுக்குச் சென்று வந்த பிறகு அறிக்கை தருகிறோம் என்று குழுவின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

*375. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் லோக்கல் லைப்ரரி அதாரிட்டியால் இந்த நிதியாண்டில் புதிதாக எந்தெந்த ஊர்களில் நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழுவால் இந்த நிதியாண்டில் புதிதாக நூலகங்கள் எதும் திறக்கப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி.சி.ஆ. சிவப்பிரகாசம் : இந்த நிதி ஆண்டில் எந்தெந்த ஊர்களில் புதியதாக நூலகங்கள் திறக்கப்பட இருக்கின்றன? ஒரு ஆண்டில் எத்தனை நூலகங்கள் திறக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வருகின்ற நிதி ஆண்டில் எவ்வளவு திறக்கப்பட வேண்டும் என்ற விவரங்களைப் பற்றிய குறிப்பு இங்கே இல்லை. இவ்வளவுதான் திறக்கப்பட வேண்டும் என்று கட்டாய விதி எதுவும் இல்லை. இந்த நூலகக் குழு தன்னிடத்தில் இருக்கிற நிதி வசதி, ஆதாயம் இவைகளை அடிப்படையாக வைத்து, அவ்வப்பொழுது முடிவு எடுத்து, நூலகங்கள் திறக்கப்படுகின்றன. நிதி வசதி இவ்வளவு பெற்று நூலகங்களுக்கு இவ்வளவு செலவழிக்கலாம், நூல்களுக்கு இவ்வளவு செலவழிக்கலாம் என்று குறிப்பு வந்ததற்குப் பிறகு ஒரு வரைமுறையான திட்டவட்டமான முறையினை நாம் மேற்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : இந்த நூல் நிலையங்களிலுள்ள புத்தகங்களைப் பயன்படுத்திக்கொள்ள மக்களுக்குப் போதிய அவகாசம் இல்லை. ஆகவே, மூவிங் லைப்ரரீஸ், தெருத்தெருவாக வண்டிகளிலே புத்தகங்களைக் கொண்டு போய் எல்லா ஜனங்களும் படிப்பதற்கான வகையில் வழங்கும் ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை, கோவை, வேறு சில மாவட்டங்களில் இயங்கும் நூலகங்கள் இருந்து வருகின்றன. அம்மாதிரி வேறு சில மாவட்டங்களிலும் நிதி வசதியைப் பொறுத்து அதை விரிவுபடுத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருந்து வருகிறது.

திரு. கா. காளிமுத்து : புதியதாக நூலகங்களைத் திறப்பதோடுகூட, நூலகங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வினைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது பல மாவட்டங்களில் நூலகங்களில் ஒரு ஆண்டுக்கு அதிகமாக வருகை தந்தவர்களுக்கும், அதிகமாக நூல்களைப் படித்தவர்களுக்கும் சில பல பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பள்ளியிலிருக்கும்போதே நூல்களைப் படிக்கின்ற பயிற்சி தந்தால் மேலும் நூல்களைப் படிக்க வேண்டும் என்று ஆர்வம் பொது மக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும். நூல்களைப் படிக்க வேண்டும் என்ற பழக்கத்தைப் பள்ளிப் பருவக்காலத்திலிருந்தே, கல்லூரிப் பருவக் காலத்திலிருந்தே மேற்கொள்ளச் செய்ய வேண்டும். நூல்களைப் படிக்கின்ற ஆர்வம் 25, 30 வயதில் திடீரென்று வந்துவிடாது. ஆகவே, பள்ளிகளிலேயே நூல்களை அதிகமாகப் படிக்கும் ஆர்வத்தை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நூலகங்களை மேலும் ஊக்குவிக்கும் முறையில் சில பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. இராமசாமி : ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் நூலகங்களை ஏற்படுத்த ஊராட்சி மன்றத்தின் நிதியிலிருந்து பணத்தைச் செலவு செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

[974 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஊராட்சி மன்றத்திலேயே ஏற்பாடு செய்வது கடினம். பல ஊராட்சி மன்றங்களில் ஊராட்சி மன்றப் பணிகளுக்கே போதுமான அளவுக்கு நிதி வசதி இல்லாமல், அந்த அளவுக்கு நிதி வசதியைப் பெற்றுத் தர வேண்டும் என்பது மற்றொரு பக்கம் இருந்து வருகிறது. இருந்த போதிலும் இந்த நிதி வசதியைப் பெருக்குவதற்கும் என்ன முறைகளைக் கையாளலாம் என்று ஆராய்ந்து வருகிறோம். அறிக்கை வந்ததற்குப் பிறகு அந்த அறிக்கையில் கண்டுள்ள கருத்திற்கு இணங்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மருத்துவமனை ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகள்.

* 376—வினா—திரு. இராம. அரங்கண்ணல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மருத்துவ மனைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் பற்றி நடவடிக்கை எடுக்க அரசு செய்துள்ள ஏற்பாடு என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு மருத்துவ மனைகளுக்கான ஆலோசனைக் குழுக்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட மருத்துவ அதிகாரிகளால், அத்தீர்மானம் ஒவ்வொன்று குறித்தும் அவரது குறிப்புரைகளுடன், சுகாதாரப் பணிகள் குடும்பநலத் துறை இயக்குநருக்கும் மருத்துவக் கல்வி இயக்குநருக்கும் அனுப்பப்படுகின்றன. இத்தீர்மானங்களைச் செயல்படுத்துவது இயக்குநரின் நிதி வழங்கு அதிகாரங்களுக்குள் இருந்தால், நிதி வசதிக்கு உட்பட்டு இன்றியமையாத தேவை, வசதி அடிப்படையில் அவற்றிற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அவர்களது நிதிவரையறைகளுக்கு மேற்பட்ட தீர்மானங்கள், பரிசீலனைக்காகவும் ஒப்புதல் வழங்குவதற்காகவும் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த ஆலோசனைக்குழு எப்படி அமைக்கப்படுகிறது? சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து அந்தக் குழு அமைக்கப்படுகிறதா அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாமலே அமைக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த ஆலோசனைக் குழு ஒரு சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஒரு வட்டத்தில் அமைந்திருக்குமானால் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அங்குள்ள நகர மன்றத் தலைவர், சமூக சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு பெண்மணி, மருத்துவத் துறை அதிகாரி, மேலும் பல்வேறு அமைப்புகளிலுள்ள இரண்டு உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய 6 அல்லது 7 பேர்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது. அந்தக் குழுவை யார் அமைக்க வேண்டுமென்று விதி இல்லை, அமைக்கப்படும் முறை இப்படி இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.